இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 16-04-2025

# பிரதமர் ஏன் கண்டிக்கவில்லை?

**இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் மீதான வர்த்தக வரிகளை அதிகமாக ஆக்கி உள்ளது அமெரிக்கா. இதனை உலகின் பல நாடுகள் கண்டித்துள்ளன. எதிர்த்துள்ளன. விமர்சித்துள்ளன. பதில் நடவடிக்கைகளில் இறங்கி உள்ளன. ஆனால் இதில் எதையும் செய்யவில்லை ஒன்றிய பா.ஜ.க. அரசு.**

அமெரிக்கா மீது வரிகளையும் பிற தடைகளையும் விதித்துள்ள 'மோசமான நாடுகளில்' ஒன்றாக இந்தியாவை பட்டியலிட்டுள்ளது அமெரிக்கா. இதன் காரணமாக இந்தியா மீது 27 விழுக்காடு வரி விதித்துள்ளது அமெரிக்கா. இதுவரை 2 விழுக்காடு வரி மட்டுமே விதிக்கப்பட்டு வந்த நிலையில், இந்தியா மீது தற்போது 27 விழுக்காடு வரி விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க சரக்குகளுக்கு இந்தியா 52 விழுக்காடு வரி விதிப்பதாக, அமெரிக்க அதிபர் டிரம்ப் குறிப்பிட்டார். இந்தியா மிகவும் கடினமான அணுகுமுறையை கொண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

வர்த்தகக் கொள்கைகளைப் பொறுத்தவரை, 'இந்தியா மிகவும் கடினமாக நடந்து கொள்வதாகவும்' டிரம்ப் தெரிவித்தார். இந்தியச் சந்தையில் அமெரிக்க இறக்குமதிகள் போட்டியிடுவதை இந்தியாவின் வர்த்தகக் கொள்கைகள் மிகவும் கடினமாக்குகிறது என குறிப்பிட்ட அவர், **"இந்தியா மிக மிக கடுமையாக நடந்து கொள்கிறது. பிரதமர் மோடி சமீபத்தில் இங்கு வந்து சென்றிருந்தார். அவர் எனக்கு சிறந்த நண்பர். நான் அவரிடம், 'நீங்கள் என் நண்பர்தான். ஆனால், நீங்கள் எங்களை சரியாக நடத்தவில்லை' என்று சொன்னேன். அவர்கள் 52 விழுக்காடு இறக்குமதி வரி விதிக்கிறார்கள். நாம் பல ஆண்டுகளாக அவர்களுக்கு இறக்குமதி வரி விதிக்கவில்லை"** என்றார்.

'இன்று தான் அமெரிக்காவுக்கு உண்மையான விடுதலை நாள்' என்றும் டிரம்ப் அறிவித்தார். இந்த அனைத்து வரியும் வரும் ஏப்ரல் 9 ஆம் தேதி 12.01 மணி முதல் அமலுக்கு வருவதாக வெள்ளை மாளிகை அறிவித்தது. இந்த வரி விதிப்புக்கு உலக தலைவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

சீனாவுக்கு 125 விழுக்காடு வரை இறக்குமதி வரியை அதிகப்படுத்தி இருப்பதால் அந்த நாடு கடும் எதிர்ப்பை காட்டி வருகிறது. சீனாவுக்கு இறக்குமதி ஆகும் பொருட்களுக்கு வரியை அதிகப்படுத்தி இருக்கிறது சீனா.

ஆஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்பானி, "இந்த நியாயமற்ற வரிகளுக்கு மிக பெரிய விலையை அமெரிக்க மக்கள்தான் செலுத்த போகிறார்கள். அப்படி நாங்களும் வரியை அறிவித்தால் எங்கள் நாட்டிலும் விலை அதிகரிக்கும். வளர்ச்சி குறையும்.. எனவே அதை செய்ய போவதில்லை" என்று சொல்லி இருக்கிறார்.

கனடா பிரதமர் மார்க் கார்னி, " ஸ்டீல், அலுமினியம் மற்றும் ஆட்டோமொபைல்கள் மீதான அமெரிக்க வரிகள் பல லட்சம் கனடா மக்களை கடுமையாக பாதிக்கும். இதற்கு பதிலடி கொடுக்கும் நடவடிக்கைகளை நாங்கள் நிச்சயம் எடுப்போம். அதுவும் வெகு சீக்கிரமாக நடவடிக்கை இருக்கும்." என்று சொல்லி இருக்கிறார்.

பிரிட்டன் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர், "இந்த வர்த்தக போர் யாருக்கும் நன்மையை தராது. நாங்கள் அனைத்திற்கும் தயாராகவே இருக்கிறோம்." என்று சொல்லி இருக்கிறார்.

"அமெரிக்காவின் இந்த வரி விதிப்பு இரு தரப்பையும் பாதிக்கும்" என ஜெர்மனி கவலை தெரிவித்துள்ளது. ஸ்வீடன் பிரதமர் உல்ஃப் கிறிஸ்டர்சன், "நாங்கள் ஒரு வர்த்தக போரை விரும்பவில்லை" என்று தெரிவித்திருக்கிறார்.

இத்தகைய எதிர்ப்பை அறிந்ததும், 90 நாட்களுக்கு இந்த வரி விதிப்பை நிறுத்தி வைப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. ஆனாலும் சீனாவுக்கான வரி விதிப்பு நிறுத்தி வைக்கப்படவில்லை. இப்பிரச்சினை 90 நாட்களுக்கு பிறகு மீண்டும் எழும் என்றே கணிக்க வேண்டி உள்ளது.

இத்தகைய சூழலில், இந்தியாவை ஆளும் பா.ஜ.க. அரசு, இந்தப் பிரச்சினையில் அமைதியாகவே இருக்கிறது. 'அமெரிக்காவின் நடவடிக்கை கவலை தரக் கூடியது' என்று சொல்லி முடித்துக் கொண்டார் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர். இந்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் இதுதொடர்பாக வெளியிட்ட அறிக்கையில், "இந்த சமீபத்திய நிகழ்வுகள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது, இதனால் பாதிக்கப்படும் அனைத்துத் தரப்பினரிடமும் ஆலோசனை நடைபெற்று வருகிறது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் அறிவிப்பு நமது ஏற்றுமதி இறக்குமதியில் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். இந்தியாவின் மொத்தப் பொருட்கள் ஏற்றுமதியில் 18 விழுக்காடும், இறக்குமதியில் 6.22 விழுக்காடும் அமெரிக்கா கொண்டுள்ளது. இப்போதைய அந்த அரசின் வரி விதிப்பானது இதனைப் பாதிக்கும். நடப்பு நிதி ஆண்டுக்கான இந்தியாவின் வளர்ச்சி விகிதம் 6.7 விழுக்காட்டில் இருந்து 6.5 விழுக்காடாக குறைந்துள்ளது. இதனை , அமெரிக்காவின் நடவடிக்கையானது இன்னும் குறைக்கும்.

**டிரம்ப் அறிவிப்பால் இந்திய பங்குச் சந்தை பெரிய பாதிப்பை எதிர்கொண்டது. வாகனம், ஆபரணம், தகவல் தொழில் ஆகியவற்றின் பங்குகள் சரியத் தொடங்கியது. ஜவுளி, ஆடைகள், மின்னணுப் பொருட்கள், நகைகள், வாகனங்கள், வாகன உதிரி பாகங்கள், இயந்திரங்கள், ரசாயன உரங்கள், மருந்துகள், ஐ.டி. மற்றும் சேவைகள் மிகப் பெரிய அளவுக்கு இந்தியாவில் பாதிக்கப்படும். ஆனால் அதைப் பற்றி எல்லாம் பா.ஜ.க. தலைமை கவலைப்படுவது இல்லை.**

**வரி விதிப்புக்கு உள்ளாகாத ரஷ்யாவும், சிங்கப்பூரும் இதனைக் கண்டித்துள்ளது. ஆனால் பாதிப்புக்கு உள்ளாக இருக்கும் இந்தியா கண்டிக்கவில்லை. பிரதமர் மோடி, யாருக்கான பிரதமர் ?!**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.4.2025) முகாம் அலுவலகத்தில், திராவிடத் தமிழர் கட்சியின் தலைவர் தோழர் வெண்மணி அவர்களின் மகன் பிரபாகரன் – ஜனனி ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். இம்மணவிழாவில், திருமதி துர்கா ஸ்டாலின் மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன், திராவிடத் தமிழர் கட்சியின் நிர்வாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (15.4.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் 2025 – 2026 ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத் துறை, எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (15.4.2025) தலைமைச் செயலகத்தில், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி.என். கயல்விழி செல்வராஜ் 2025 – 2026 ஆம் ஆண்டிற்கான மனிதவள மேலாண்மைத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

# ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில், அரசமைப்புச் சட்டத்தின் கதி என்ன?


## அரசமைப்புச் சட்ட நிபுணர்களான பிரபல வழக்கறிஞர்களின் கருத்து!

புதுடெல்லி, ஏப். 16 -

நாட்டில் அரசியல் சாசனத்தின் அடிப்படை கோட்பாட்டை ஒழிக்கும் முயற்சிகள் நடைபெற்று வருவதாக ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி ரோஹிண்டன் நாரிமன் குற்றம்சாட்டியுள்ளார்.

அரசியல் சாசனம் நாள்தோறும் மீறப்படுகிறது என்றும், அதன் அடிப்படை பாதுகாப்பை சிதைக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன என்றும் மூத்த வழக்கறிஞர் கபில் சிபல் குற்றம்சாட்டியுள்ளார்.





அரசியல் சாசனத்தின் அடிப்படை கட்டமைப்பு கோட்பாடு என்ற புத்தகம் வெளியீட்டு நிகழ்ச்சி டெல்லியில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி ரோகிண்டன் நாரிமன், மூத்த வழக்கறிஞர் கபில் சிபல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி ரோகிண்டன் நாரிமன், அரசியல் சாசனத்தின் அடிப்படை கோட்பாட்டை ஒழிக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன என்று குற்றம்சாட்டினார். அப்படி நடைபெற்றால் நாட்டை கடவுள்தான் காக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

இதற்கிடையே, இந்நிகழ்ச்சியில் பேசிய உச்சநீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத் தலைவரும், மூத்த வழக்கறிஞருமான கபில் சிபல், அரசியல் சாசனம் நாள்தோறும் மீறப்பட்டு வருவதாக தெரிவித்தார். அரசியல் சாசன அடிப்படையை மாற்றாமல் இன்று அதனை மீறும் செயல்கள் நடைபெற்று வருகிறது என்றும், அரசியல் சாசனத்துக்கு எதிராக சட்டங்களை திருத்துவதன் மூலம் அதனை செய்து வருகிறார்கள் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

## ஆங்கில வழி பாடப் புத்தகங்களின் பெயர்களை

# இந்தியில் மாற்றம் செய்த ஒன்றிய பா.ஜ.க. அரசு!

## கல்வியாளர்கள் கடும் எதிர்ப்பு!

புதுடெல்லி, ஏப். 16 -

ஒன்றிய அரசின் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், ஆங்கில வழி பாடப் புத்தகங்களின் பெயர்களை இந்தியில் மாற்றம் செய்திருப்பது கல்வியாளர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஒன்றிய அரசின் மும்மொழிக் கொள்கைக்கு எதிராக, தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள் கடும் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில், தன்னாட்சி அமைப்பாக செயல்பட்டு வரும், ஒன்றிய அரசின் தேசியக்கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம், ஆங்கிலவழி பாடப் புத்தகங்கள் பலவற்றிற்கு, இந்தியில் பெயரை மாற்றியுள்ளது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

6 மற்றும் 7ம் வகுப்புகளுக்கான ஆங்கிலமொழி பாடப்புத்தகங்களின் பெயர்கள் முன்பு 'ஹனி சக்கிள்' மற்றும் 'ஹனி கோம்ப்' என்று இருந்தன.

இந்த இரண்டு வகுப்புகளுக்கான ஆங்கில புத்தகத்தின் பெயர் 'பூர்வி' என இந்தியில் மாற்றப்பட்டுள்ளது.

அதேபோல 1 மற்றும் 2ம் வகுப்புகளுக்கான புதிய ஆங்கில புத்தகங்களின் பெயர் 'மிருதங்' என்றும், 3, 4ம் வகுப்புகளுக்கான பாட புத்தகங்களின் பெயர் 'சந்தூர்' என்றும் பெயர் மாற்றப்பட்டுள்ளது. பிற பாடங்களான கணிதம், அறிவியல், சமூக அறிவியல் போன்ற பாட புத்தகங்களுக்கும் இந்தியில் பெயர் மாற்றப்பட்டுள்ளது.

ஆறாம் வகுப்பு கணித பாட புத்தகத்திற்கு 'கணித பிரகாஷ்' என்றும், 3ம் வகுப்பு கணித பாடப்புத்தகத்திற்கு 'கணித மேளா' என்றும் மாற்றப்பட்டுள்ளது. 6ம் வகுப்பு கலை பதிப்புக்கு 'கிருதி1' என்றும், 3ம் வகுப்பு உடற்கல்விக்கு 'கேல் யாத்ரா' என்றும், 6ம் வகுப்பு தொழிற்கல்விக்கு 'கவுஷல் போத்' என்றும் இந்தியில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கைக்கு கல்வியாளர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ஆங்கிலவழி பாடப் புத்தகங்களுக்கு, இந்தியில் பெயரை மாற்றியுள்ள என்.சி.இ.ஆர்.டியின் நடவடிக்கைக்கு, கடும் கண்டனம் எழுந்துள்ளது. இது நாட்டின் பன்முகத் தன்மையை கேள்விக்குள்ளாக்குவதுடன், கலாச்சார திணிப்பு நடவடிக்கை என கேரள கல்வி அமைச்சர் சிவன்குட்டி கண்டனம் தெரிவித்துள்ளார்.

மேலும், மாணவர்களிடையே உணர்திறன் மற்றும் புரிதலை வளர்க்கும் நீண்ட கால ஆங்கில தலைப்புகளை மிருதங்கம், சந்தூர் என பெயர் மாற்றுவது பொருத்தமற்ற செயல் என்றும், இந்த திடீர் நடவடிக்கை மாணவர்களின் கற்றல் திறனை பாதிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்த பெயர் மாற்ற நடவடிக்கை மொழியியல் பன்முகத் தன்மைக்கும், பிராந்திய கலாச்சார சுயாட்சிக்கும் எதிரானது என்றும் கேரளாவின் உறுதிப்பாட்டிற்கும் முரணானது என்றும் அவர் கண்டனம் தெரிவித்துள்ளார்.